
# யோக சுவாமிகள் அருளிய முருகன் பாடல்கள்



வெளியீடு:
சிவயோக அறநெறிப் பாடசாலை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார் ?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று
சித்தமன்று, நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது, இது
மகான்களுடைய அநுபவ சித்தாந்தம்.
இந்த உண்மை உனது உள்ளத்தில்
நன்றாய்ப் பதியக் கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது
ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே,
எவ்வுயிரும் பெருமான்
திருமுன்னிலை என்று சாதனை செய்.
கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## யோக சுவாமிகள் அருளிய

# முருகன் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையடி வாழ்க

திங்களுங் கங்கையும் சென்னியிற் றாங்கிய
எங்கள் பெருமான் இணையடி வாழ்க
ஒருபொல் லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் குஞ்சித பாதம் வாழ்க
நாமறி யோமெனும் நல்ல திருமொழி
தாமறி வோனிச் சகத்தினில் வாழ்க
எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பிய வாசகம் சிறப்புடன் வாழ்க
ஆரறி வாரெனும் அருமைத் திருமொழி
தாரணி தன்னிற் சந்ததம் வாழ்க
முழுதுமுண் மையென முனிவன் சொன் மொழி
தொழுது வாழ்த்துஞ் சுதந்திரம் வாழ்க
இன்ன தன்மைய னிவனென ஏவரும்
என்று மறியா இணையடி வாழ்க
முந்திய பொருட்கெலா முதலா யுள்ளோன்
சிந்தையிற் பூத்த சிவபிரான் வாழ்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோர்க்குங் குறையுண்டோ

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணைபோற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினை தீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ 1

உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய்நீ என்னை யுன்னை
எவர் பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய் எந்தாய்
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம் பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே. 3

## எழில் நல்லை வாசன்

இராகம் - ஹிந்தோளம் தாளம் - ஆதி

### பல்லவி

எங்கள் குருநாதன் எழில் நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன் (எங்)

### அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணங்கள்

அன்பர்ச காயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத் தென்னை யாண்டவன்
இரவும் பகலுமென்றன் மனத்தினில் தாண்டவன்
(எங்)

வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன்
(எங்)

## நல்ல மருந்து

இராகம் - மோகனம் தாளம் - ரூபகம்

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே (நல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில் லாப்பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கும் மருந்து (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்துங் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கும் மருந்து (நல்ல)

## நல்லூரான் கிருபை வேண்டும்

இராகம் - சுருட்டி தாளம் - ஆதி

பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும் – நாம் எந்நாளும்
பாடவேண்டும் – வேறென்ன வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபல்லவி

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ள வேண்டும்
(நல்லூர்)

## சரணங்கள்

அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்க வேண்டும்
(நல்லூர்) 1

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும்
(நல்லூர்) 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணபவ குக

## பல்லவி

யோக குருநாதன் திருமலர்ப் பாதன்
தெரிசனம் நினை மனமே தினமே

## அநுபல்லவி

தவநிலை யோர்கள் பணியும் பொற்பாதன்
சரவண பவகுக சண்முக நாதன் (யோக)

## சரணம்

அன்பர்க ளிடர் தம்மை அகற்றுஞ் சுசீலன்
அம்மை வள்ளிதெய் வானைமகிழ் லோலன்
என்பிழை யாவும் பொறுத்தருள் சீலன்
இன்பமெந் நாளுந்தரு சுந்தரப் பாலன் (யோக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வீதியில்

இராகம் - பிலஹரி                    தாளம் - ரூபகம்

### பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாமே போமே

### அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு
(எந்நாளும்)

### சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே
(எந்நாளும்)1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே
(எந்நாளும்)2

## நல்லூரைக் கும்பிடு

இராகம் - ஜோகினி தாளம் - ஆதி

### பல்லவி

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு –அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

### அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய்
செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு
(நல்லூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் – குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் – செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கெண்டு நீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே

(நல்லூ)

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்ன மொழி
நான்மறந்து போவேனோடி –கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி –கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி– கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவணம் வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி – கிளியே!
படைகள் மோதில் மாயாதடி 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி – கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி – கிளியே!
விளங்கு நல்லூர் வாசனெடி 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி – கிளியே
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே
பொல்லாங்கு தீருமெடி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகா நீ வா

முருகா நீ வா – முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும்
முழு வல்லவனே
உருகா மனமேன் தந்தாய் – திருமால் மருகா
உவந்துவந்து சிவந்தாளிணை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)

அறுமா முகனே யரனார் மகனே
குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)

## வறுமைப் பிணிக்கு மருந்து

*இராகம்-சங்கராபரணம்* *தாளம்-ரூபகம்*

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார் 2

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம் 3

## வேலனைக் கொண்டாடுவோம்

### பல்லவி

வேலனைக் கொண்டாடுவோம்
வேறு தெய்வம் நாடிடோம்

### அநுபல்லவி

காலனைக் காலா லுதைத்தோன்
பாலனுக்கே நாமடியோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

கோலா கல மயிலின் ஏறும்
குழந்தை வேலன் பாலர் நாங்களே
(வேலனை)

ஞாலமுள்ள நாளும் யோகநாதன்
சொன்ன சொல்லைக் கொண்டு
காலையிலும் மாலையிலும் கழலடியே
போற்றிடுவோம்
(வேலனை)

## நல்லைப் பதிக்கரசே

நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா 1

கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி
வைத்திடடா 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா 3

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா 4

சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிடடா 5

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லாரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா 6

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா 7

என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா 8

## கிழமை வணக்கம்

தாயினு மன்பு தழைத்த குருவே தயாபரனே
தீயினு மிக்க திருமேனி யும்நின் திருவடியும்
நாயினு மிக்க கடையேனை ஆள நலமுடனே
ஞாயிறு தோறும வருவாய்நல் லூரில்வாழ் நாயகமே 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும்
அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கய னைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் தேசிகனே 2

ஒவ்வா தனசொல்லி ஊரூர்கள் தோறும் உலைந்
தலையும்
இவ்வீணற் காக்க இனிவரு வாயிள வேல் முருகா
தெய்வானை வள்ளி தினமும் அணிசெய்யுஞ்
சேவகனே
செவ்வாய்க் கிழமை வருவாய்நல் லூரினிற்
றேசிகனே. 3

பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேயெழில்
சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில்வாழ்
புண்ணியனே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர்
தமக்குவரும்
வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே
தியான நிலையி லுனைக்கண்டு தேறித்
தெளிவதற்கு
வியாழக் கிழமை வருவாய்நல் லூரில் வாழ்
வேலவனே. 5

புள்ளிக் கலாப மயிலேறும் வேலவ புண்ணியனே
தெள்ளித் தெளிந்தவர் சித்தத்தி லூறும்
தெளியமுதே
வள்ளிக் குகந்தவ னேமுரு காமற வாமலெனை
வெள்ளிக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ்
வேலவனே. 6

இனியே தெனக்குன் னருள்வரு மோவென
வேங்கிமனம்
தனியே யிருந்து வருந்து தையோசத்தி
வேல்முருகா
கனியே கனியி ரசமே அடியனேன் கண்களிக்கச்
சனிவாரம் தன்னில் வருவாய் நல்லூரில் வாழ்
சண்முகனே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆன்மா நித்தியம்

இராகம் - நடபைரவி   தாளம் - ஆதி

பல்லவி

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய

அநுபல்லவி

இந்த ஆன்மா நித்திய மென்ற (அந்த)

சரணங்கள்

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன
(அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன (அந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரிம னோகரி ஆனந் தாச்சி

கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்

உவந்து சேவடி கும்பிடு முத்தமன்

தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே

(அந்த)

## ஈசனே நல்லூர் வாசனே

இராகம் – கமாஸ் தாளம் – ஆதி

பல்லவி

ஈசனே நல்லூர் வாசனே

இனிய வேல்முருகா உனை நம்பினேன் வாவா

சரணங்கள்

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா

எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்வண்ணம்

வாவா (ஈசனே)

தாசனான யோகசுவாமி சாற்றும் பாவைக்

கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா

(ஈசனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல் முருகா மால் மருகா

இராகம் - கமாஸ் தாளம் - ஆதி

### பல்லவி

மாமயில் ஏறி வா – வா

### அநுபல்லவி

வேல் முருகா மால் மருகா (மாமயி)

### சரணங்கள்

கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமாந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் (மாமயி)

ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலந் தன்னில்
நீபோந்து காத்திடல் வேண்டும் (மாமயி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் வேல்

அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு - வேல் வேல்
ஆசா னடிக்கீழ் அமர்ந்துநீ நில்லு
கொஞ்சங்கொஞ்ச மாய்மனதை வெல்லு–வேல் வேல்
கூடாத கூட்டத்தை விட்டுநீ செல்லு 1

வஞ்சியர் ஆசையைத் தள்ளு - வேல் வேல்
வாணாள் ஆசையைப் பேணாமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும் - வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு 2

ஐம்பூதம் நீயல்ல நம்பு - வேல் வேல்
ஐம்பொறி ஐம்புலனும் நீயல்ல நம்பு
வெஞ்சினம் வராமல்காப்பாய்–வேல் வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய் 3

பஞ்சம் படைவந்த போது - வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன்பொருள் எண்ணு - வேல் வேல்
நாங்கள் சிவமென நாளும்நீ நண்ணு 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்ச மலர்ப்பாதம் வாழ்க – வேல்வேல்
கருணை நிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க – வேல்வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க 5

## நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன்

பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார் – அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது 1

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ் – சீராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது 2

இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட் சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொலி – நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலன் வலிதொலையக் காலெடுத்தான் தந்தருளும்
பாலன்வாழ் நல்லையம்பதியிற் - கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா 4

உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு முண்டு
தவஞ்செய்வார் தாமறிவர் தப்பார் - சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து 5

## வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம்

*இராகம் - எதுகுலாகாம்போதி*
*தாளம் - மிஸ்ரம்*

**பல்லவி**

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே
என் வினைப்பகைதீர் தெய்வமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன்
(வேலை)

சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கே நீஅங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா (வேலை)

## திருவருள் தருவாயே

இராகம் - மோகனம் தாளம் ஆதி

பல்லவி

தெய்வமே திருவருள் தருவாயே நீ

அநுபல்லவி

வையக மீதில் வணங்க அறியேன்
பொய்யும் புலையுங் கொலையுந் தவிரேன்
(தெய்வமே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

கையும் மெய்யுங் கருத்துக் கிசைய
ஐயா தந்தனையதையா னறியேன்
மெய்யா யுன்றன் மெல்லடிக் கபயம்
மேலும் மேலும் உனையான் வேண்டுவன்
(தெய்வமே)

செந்நெலுங் கன்னலுஞ் செறியும்நல் லூரில்
தேசிகன் தாசன் யோகசுவாமி
சொல்லுங் கீதம் சொல்லுவார் கேட்பார்
துன்பம் நீங்கி யின்ப மோங்கும்
(தெய்வமே)

## உய்யவழி காட்டுவாய்

தெய்வமே யானெனதெ னுஞ்செருக் கால்மனது
தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
திருவருட் பார்வை சாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
மயிலேறு தம்பிரானே

## ஞானதேசிகன்

பல்லவி

ஞானதேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக

அநுபல்லவி

ஈசனைப் பிறவி நீக்கு மெழிலது கண்டேன்
என்னை யென்னாலறிந் தானந்தங் கொண்டேன்
(ஞான)

சரணம்

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
கங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி (ஞான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் – எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் – என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து)1

அட்ட வசுக்களுங் காப்பாம் – எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் –எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து)2

பிராண னபானனுங் காப்பாம் – என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் – எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து)3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் – என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் – நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம்
(அத்து)4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம்

(அத்து) 5

## மங்களம் ஜெய மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்தமில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம் 1

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்குஞ் சிவனார்க்கு மங்களம் 2

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப் பூசை பண்ணுவோர்க்கு மங்களம் 3

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்குமங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறியோ மென்றுசொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற வுத்தமர்க்கு மங்களம் 5

தன்னைத் தன்னாலறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம் 6

மண்ணைப்பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணைநகர் வாழும்வைத் தீசனுக்கு மங்களம் 7

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுங் சங்கரற்கும் மங்களம் 8

விண்ணில் விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணிலடங் காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம் 9


நித்தியகர்மந் தவறாத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் மங்களம் 10

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

வெளியீடு : சிவயோகர் அறநெறிப் பாடசாலை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு பிறிண்டேர்ஸ் - 021 222 8266

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org